சொத்து இல்லை என்ற காரணத்தால் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். அதோடு கொஞ்ச நஞ்சம் சொத்து உள்ளவர்களுக்கு இந்தக் கடன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் கூட திரு. வடிவேலு அவர்கள் குறிப்பிட்டது போல், 600 ரூபாய் வரை செலவு செய்து தான் இதைப் பெற வேண்டியிருக்கிறது. பின்னால் இவர்களது மனு நீக்கி வைக்கப்படுகிறது. ஆகவே விரைவில் தகவல் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா? உண்மையிலேயே இந்தத்திட்டம் பலன் அளிக்கிறதா? இதுவரை எத்தனை நபர்கள் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக் கடன் கொடுப்பது, வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் அபெக்ஸ் பாடிக்கு கொடுக்கப்பட்டு, அவர்கள் பிரைமரி சங்கத்திற்கு கொடுத்து, அதன் மூலமாக பரவலாகக் கொடுக்கப்படுவதுதான் முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் புள்ளி விவரங்களையெல்லாம் கொடுப்பதானால், நிரம்ப இருக்கின்றது. அவைகளையெல்லாம் படிப்பதானால் 10,15 நிமிடங்கள் ஆகும். அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்று சொல்வீர்களானால், அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். எல்லாத் தகவல்களும் என்னிடத்திலே இருக்கின்றன. 7 கோடி ரூபாய் எப்படி 'டிஸ்பர்ஸ்' செய்யப் பட்டது? 4, 2, 1 என்பது யார் யாருக்கு எப்படி எப்படி கொடுக்கப் பட்டது, எவ்வளவு வசூலிக்கப் பட்டிருக்கிறது போன்ற தகவல்கள் எல்லாம் என்னிடத்திலே நிரம்ப இருக்கின்றன. உங்களுக்குச் சிரமங்கள் ஏதாவது இருந்தால் ஒன்று இரண்டு தான் இருக்கும். அவைகளை எழுதி அனுப்புங்கள். இன்று நண்பகலேகூட நீங்கள் அவைகளை எழுதியனுப்பலாம். அவைகளைப் பரிசீலித்து, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

பெரியசோலையில் குடிநீர் வழங்கல்

* வினா எண். 49—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி பெரியசோலையில் ரூ. 10,000 செலவில் குடிநீர் வசதி செய்து கொடுத்தும் அது உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது பழுது பார்க்கப்பட்டு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதாகிலும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) ஆம்.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.

[1979 பிப்ரவரி 14

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, பெரியசோலை பகுதிகள் தொகுதியின் கடைகோடியில் இருப்பதால், இங்குள்ள பிரச்னைகளைப் பற்றி அதிகாரிகள் போய் கவனிப்பதில்லை. இதைப்பற்றி நான் நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் இந்தக் கேள்வியைப் போட்டு, கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகின்றன. அந்தப் பகுதி மக்கள் குடிநீர் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இதை உடனடியாக பரிசீலிக்க முன்வர வேண்டுமென்றும், அப்படி பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய பதிலிலேயே இது பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறேன்.

புது ஆயக்குடி-வரதாப்பட்டினம் சாலை

*வினா எண். 50—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், புது ஆயக்குடியிலிருந்து வரதாப்பட்டினம் செல்லும் சாலை கடந்த 15 ஆண்டு காலமாக எவ்வித மராமத்தும் இல்லாமல் போக்குவரத்துக்கு லாயக்கற்று கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை பின்வரும் ஆண்டுகளில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் நிதி நிலைமை மற்றும் பணியின் முதன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புது ஆயக்குடி வரதாப்பட்டினம் சாலை என்பது மிகவும் முக்கியமான சாலை. இந்தச் சாலைக்கு ஜில்லா போர்டு காலத்தில் மெட்டல் போடப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த எந்த அரசும் இந்தச் சாலையைப் பற்றி கவனிக்கவே இல்லை. ஆனால், இது போக்குவரத்துக்கு மிகமிக முக்கியமான சாலையாக இருக்கின்றது. ஆகவே, இந்தச் சாலையை தற்போது கொடைக்கானலிலிருந்து, பழனிக்கு வரும் வரதாமுத்து அணை வழியாக பழனிக்குக் கொண்டு வந்தால் வசதியாக இருக்கும். அதோடு, கொடைக்கானலிலிருந்து பழனிக்கு வரும் தற்போதைய சாலை தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு வரும் தெரு வீதியைத் தொடுவதால், அங்கு வரக்கூடிய பக்தர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக வரதாமுத்து